DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 7

| | | | |
|---|---|---|---|
| Name : | விஸ்வலிங்கம் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of January 2025.

2ம் எதிரி நேரில் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சிவகங்கையை அடுத்த சஞ்சை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பொதுவாக ஹோட்டல் தொழில் செய்து வருகிறேன். தேதி சரியாக ஞாபகமில்லாத நாள் ஒன்றில் 3 ஆண்டுகளுக்கு முன்னால் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் குப்புற விழுந்ததில் ஒருவர் இறந்து கிடந்தார். அன்று இரவு 8.00 மணியளவில் சிவகங்கை நகர் காவல்ஆய்வாளர் அவர்கள் அங்கு வந்து வீட்டிலிருந்த என்னை அழைத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அவர்கள் எழுதிய மகஜரில் என்னிடமும் சுப்பையா என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். ஒரு வெள்ளை நிற முண்டாபணியன் ஒன்றும், அரைக்கை சட்டையும் கைப்பற்றி அவைகளை எடுத்ததற்காக எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். நான் கையெழுத்து இட்ட பார்வைமகஜர் அ.சா.ஆ,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொருட்கள் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெள்ளை நிற முண்டாபணியன் சா.பொ.7, சட்டை சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எதிரி அன்னலெட்சுமி வீட்டிற்கு மேற்குபுறத்திலும், வடக்கு புறத்திலும் சம்பவ சமயத்தில் வேறு வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே எத்தனை வீடுகள் உள்ளது என்றால் அப்போது ஆறு வீடுகள் இருந்தது. எதிரி அன்னலெட்சுமியின் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் ஒரு பெரிய

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.01.07 16:00:16 +0530

வீடு இருந்தது அந்த வீடு யாருடையது என்றால் குமாரபட்டி கிராமத்தை சேர்ந்தவருடையது அவரது பெயர் தெரியாது. அன்னலெட்சுமி வீட்டிற்கு தெற்கு புறத்தில் எந்த வீடும் இல்லை என்றால் சரிதான். அந்த ஆறு வீடும் உள்ள தெருவில் தெருவிளக்கு இருந்ததா என்றால் எதிரியின் வீட்டிற்கு கிழக்கு புறத்தில் தெருவிளக்கு இருந்தது. பார்வை மகஜர் மற்றும் பொருட்களை எடுத்தபோது என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் அந்த பொருட்கள் இருக்கும் இடத்திலிருந்து எடுத்து என்னை விசாரித்துதான் கையெழுத்து வாங்கினார்கள். இரத்தம் பட்ட மண் படாத மண்ணை என் முன்பாகத்தான் எடுத்தார்களா என்றால் நான் சென்ற பிறகு தான் எடுத்தார்கள் ஆனால் அது இரத்தம் பட்ட மண்ணா என்பது எனக்கு தெரியாது. நான் பார்வை மகஜர் தயார் செய்த நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் சம்பவ நேரத்தில் மதுரை மருத்துவமனையில் இருந்தேன் என்றும் இந்த வழக்கு சம்மந்தமாக இறந்தவருக்கு அடி பட்டு காயம் ஏற்பட்டு இரத்தம் வரவில்லை என்றும் அதனால் இரத்தம் படிந்த மண் மற்றும் படியாத மண்ணை எடுக்க வாய்ப்பில்லை என்றும் நான் இறந்தவரின் உறவினார் என்பதால் வழக்கிற்கு ஏதுவாக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரித்த அத்தாட்சி மகஜரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.01.07 16:00:24 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 8

| | | | |
|---|---|---|---|
| Name : | அய்யம்போஸ் | Caste: | |
| Father Name/Husband name | கருப்பையா | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of January 2025.

2ம் எதிரி நேரில் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சிவகங்கை அருகில் உள்ள தமராக்கி தெற்கு கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய தொழில் செய்து வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் ஊரைச்சேர்ந்த போதுராஜா என்பவர் திருவாதவூர் கிராமத்திற்கு மாட்டுரேசுக்காக சென்றவர் மறுநாள் வரை காணவில்லை என்று எங்கள் ஊரில் தேடிக்கொண்டிருந்தார்கள். நானும் சேர்ந்துதேடினேன். பார்த்து 3 நாட்களுக்கு பின்னால் சிவகங்கை மேலூர் ரோட்டிற்கு அருகில் உள்ள சஞ்சை நகரில் ஒரு வீட்டிற்கு பக்கத்தில் அவர் இறந்துகிடந்ததாக தகவல் கிடைத்து நானும் எனது ஊரைச்சேர்ந்தவர்களும் பார்க்கசென்றோம். அப்போது இரவு 9.00 மணியிருக்கும். அப்போது போதுராஜா இறந்துகிடந்த இடத்தில் காவல்துறையினர் இரத்தம் பட்ட மண் கொஞ்சமும், இரத்தம் படாத மண் கொஞ்சமும் எடுத்தார்கள். அதற்கு பிறகு 20 நிமிடம் சென்று இறந்த நபரின் பணியன், மற்றும் சட்டை உடைந்த கிடந்த வளையல் கொஞ்சமும் கைப்பற்றினார்கள். அது குறித்த அத்தாட்சியில் நான் கைரேகை வைத்தேன். இறந்த கிடந்த நபரின் கையில் இருந்து 5, 6 முடிகளும் அத்துடன் அவர் கழுத்தில் கட்டியிருந்த வேட்டியில் இருந்த 5, 6 முடிகளையும் எடுத்தார்கள். இவை குறித்த தயாரித்த அத்தாட்சிகளில் நானும் அய்யனார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சிகள் முறையே **அ.சா.ஆ.6, 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அத்தாட்சி அசா.ஆ.5 ல் உள்ள கைரேகை என்னுடையதுதான். அது

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2025.01.07 16:00:32 +0530

**அ.சா.ஆ.8** . ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட சான்றுப்பொருட்கள் உடைந்த வளையல்கள் **சா.பொ.9**, இரத்தம் பட்ட மண் **சா.பொ.10**, மாதிரி மண் **சா.பொ.11**. முடிகள் முதலில் கைப்பற்றியது **சா.பொ.12**, வேட்டியில் கைப்பற்றிய முடிகள் **சா.பொ.13**. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சஞ்சை நகரில் போதுராஜா இறந்து கிடந்த விவரம் எனக்கு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் இரவு 7.00 மணிக்கு தெரியும். அப்போது அங்கு 100 பேர் இருந்தார்களா என்றால் எங்கள் ஊரே திரண்டு சென்றோம். அப்போது போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் அங்கு தான் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் அங்கு எப்போது வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றிய முடியின் அளவு எவ்வளவு செமீ இருந்தது என்று என் முன்பாக அளந்தார்களா என்றால் எங்கள் முன்பு எடுத்தார்கள் இருட்டாக இருந்ததால் அது எப்படி இருந்தது என்பது எனக்கு தெரியாது. அப்போது இறந்த நபரின் உடல் முழுவதும் அழுகி இருந்தது என்றால் சரிதான். பார்க்க முடியாத அளவு இருந்தது. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியில் நான் கைரேகை தான் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான் எனக்கு படிக்க தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் காவல்துறையினர் 2வது எதிரியை கைது செய்து அவரது தலைமுடியை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்பி வைக்க தயார் செய்த ஆவணத்தில் நான் காவல்நிலையத்தில் வைத்து கைரேகை வைத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் கைரேகை வைத்தேன். காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டதால் தான் இரசாயன பகுப்பாய்விற்காக நீதிமன்ற நடுவர் நீதிமன்றத்திற்கு 16.03.2020 அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.01.07 16:00:38 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை